# Deposition of Witness

**(Chapter XXIII Code of Criminal Procedure )**
**In the Court of Judicial Magistrate No.III Cuddalore.**

| | |
|---|---|
| Case Number | : CC.No.226/2022 |
| Police Station | : Devanampattinam P.S |
| Deposition of witness for Prosecution | : PW1/LW1 |
| Name | : Karnan |
| Father Name/Husband Name | : Shanmugam |
| Address | : |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 விதிமுறைகளின் படி 09.11.2023 நாளாகிய இன்று திரு. ஜி. இரகோத்தமன், M.A.,L.L.M., நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.3, கடலூர் அவர்களால் சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டது.

எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**<u>முதன்மை விசாரணை:</u>**

01. நான் தற்போது தாழங்கூடாவில் வசித்து வருகிறேன். நான் மீன்பிடிக்கும் தொழிலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். கடந்த 03.02.2022 அன்று எங்கள் ஊரை சேர்ந்த முருகாம்மாள் என்பவர் இறந்துவிட்டார், அவர் இறந்த காரணத்தால் ஊர் மக்கள் யாரும் கடலுக்கு செல்லமாட்டார்கள். ஆனால் வைத்தியலிங்கம் மகன் முருகன் (எ) வைமுருகன் மட்டும் கடலுக்கு சென்றார். அப்பொழுது என் பெரியம்மா மகன் சங்கர் என்பவர் ஏன் நீ மட்டும் கடலுக்கு மீன்பிடிக்க செல்கிறாய் என்று அவரை கேட்டபோது, வைமுருகன் சங்கரை செறுப்பால் அடித்துவிட்டார்.

2. இந்த விவரத்தை எனது பெரியம்மா மகன் சங்கர் என்னிடம் கூறினார். 05.02.2022-ம் தேதி டீ கடையில் வைமுருகன் நின்றிருந்தபோது நான் அவரிடம் சென்று ஏன் பெரியம்மா மகன் சங்கரை ஏன் நீ செறுப்பால்

அடித்தாய் என்று கேட்டேன். அதனால் எனக்கும் வைமுருகனுக்கும் வாய்தகராறு ஏற்பட்டது.

3. பிறகு மதியம் 2.30 மணியளவில் தாழங்கூடா வலைபின்னும் கட்டிடம் அருகே நானும் என் மச்சான் சதீஷிம் பேசிக் கொண்டிருந்தபோது, அப்பொழுது வைமுருகன் மற்றும் அவரின் மகன்களான முகுந்தன், விக்கி, கலை ஆகியோர்கள் அங்கு வந்து, வைமுருகனின் மகன்கள் 3 பேரும் என்னை பார்த்து டீ கடையில் என் அப்பாவை என்ன கேட்டாய் என்று தேவிடியா பையா என்று அசிங்கமாக தகாத வார்த்தையால் திட்டினார்கள். என் மச்சான் சதிஷை வைமுருகன் கட்டையால் முகத்தில் அடித்தார், கலை என் மச்சான் சதிசை கையால் அடித்தார். முகுந்தனும் விக்கியும் சேர்ந்து கல்லால் சதிஷை மூக்கில் குத்தினார்கள். அதனால் சதீஷிக்கு அதிகமாக ரத்தம் வந்து மயங்கி கீழே விழுந்துவிட்டார். பிறகு என்னை வைமுருகன் கட்டையால் இடது தோள்பட்டையில் அடித்தார். கலை என்பவர் என்னை பார்த்து தேவிடியா பையா என்று அசிங்கமாக தகாத வார்த்தையால் திட்டி, செத்துபோடா என்று கூறினார். முகுந்தன் என்னை முதுகில் கல்லால் அடித்தார். பிறகு எதிரிகள் அனைவரும் சேர்ந்துக்கொண்டு கையில் வைத்திருந்த கட்டையை காண்பித்து என்னிடம் மீண்டும் பிரச்சனை செய்தால் இதாலேயே அடித்து கொலை செய்துவிடுவேன் என்று கொலைமிரட்டல் விடுத்தார்கள். அப்பொழுது பிச்சாண்டி, கௌதமன் அங்கு வந்தவுடன் இவர்கள் அனைவரும் ஓடிவிட்டார்கள். பிச்சாண்டி, கௌதமனும் இருவரும் என்னை கடலூர் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அழைத்து சென்றார்கள். நான் மருத்துவமனையில் சிகிச்சையிலிருந்தபோது தேவானம்பட்டினம் போலிசார்

என்னை விசாரித்து புகார் வாக்குமூலம் பெற்றார்கள். நான் புகார் வாக்கு மூலத்தில் நடந்த விவரங்களை சொன்னேன். அதை அவர்கள் பதிவு செய்தார்கள், அதில் நான் கையொப்பம் செய்தேன். புகார் வாக்கு மூலத்திலுள்ள கையெழுத்து என்னுடையது தான். **(05.02.2022 தேதியிட்ட புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** இந்த வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:</u>

4. நான் பத்தாம் வகுப்பு படித்து முடித்துவிட்டு, மீன்பிடி வேலை செய்து வருகிறேன். கடந்த 03.02.2022 அன்று கடலுக்கு மீன்பிடிக்க செல்லகூடாது என்று மாவட்ட ஆட்சியர் எழுத்துபூர்வமான உத்தரவு எதுவும் இருந்ததா என்றால் இல்லை. நான் எந்த அரசு பதவியிலும் இல்லை. என் மச்சான் சதீஷ் எந்த அரசு பதவியிலும் இல்லை.

5. 1-ம் எதிரி சங்கரை செறுப்பால் அடித்தது சம்மந்தமாக புகார் ஏதும் கொடுத்தேனா என்றால் இல்லை. சங்கர் என்னிடம் இந்த தகவலை 05.02.2022 காலை 10.00 மணிக்கு தான் சொன்னார். எந்த டீ கடையில் 1-ம் எதிரியிடம் சம்பவம் பற்றி கேட்டேன் என்று எனது விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான்.

6. வலைபின்னுவது என்பது கடலுக்கு ஓரத்தில் இருக்கும் கடற்கரையில் தான் பின்னுவார்கள் என்றால் சரிதான். சம்பவ இடத்தில் பொதுமக்கள் இருந்தார்களா என்றால் யாரும் இல்லை. எதிரிகள் யார் யார் எந்தெந்த ஆயுதங்களை கையில் எடுத்துக்கொண்டு வந்து என்னை அடித்தார்கள் என்று எனது புகார் வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரியல்ல, சொல்லியுள்ளேன். புகார் வாக்குமூலம் நான் சொல்ல

சொல்ல போலிசார் எழுதினார்கள், புகாரை எழுதிய போலிசாரின் பெயர், தகுதிநிலை எனக்கு தெரியாது.

7. பின்னிட்டு இந்த வழக்கு சம்மந்தமாக, மஞ்சக்குப்பம் தனியார் மருத்துவமனையான வேலுஉடையான் மருத்துவமனையில் இருந்தபோது போலிசார் 4 நாட்கள் கழித்து என்னை விசாரித்தாரகள், தேதி ஞாபகமில்லை. அதன்பிறகு 3 நாட்கள் கழித்து வீட்டில் உதவி ஆய்வாளர் முருகன் என்னை விசாரித்தார்கள். ஒரு முறை தான் வாக்குமூலம் பதிவு செய்தார்கள், மற்ற முறை வாய்வழியாக தான் விசாரித்தார்கள். எனக்கு எழுத படிக்க தெரியும், நான் வலது கையால் தான் எழுதுவேன், வலது கை நல்ல நிலையில் தான் இருந்தது, ஆனால் நான் மயக்கநிலையில் இருந்தேன்.

8. 1-ம் எதிரி சவுக்கு கட்டையால் என்னை அடித்தார். சவுக்கு கட்டை என்று குறிப்பிட்டு எனது விசாரணையில் நான் சொல்லவில்லை. கட்டை என்பது வேறு, குச்சி என்பது வேறு என்றால் சரிதான். எதிரிகள் நால்வரும் ஒரே நேரத்தில் என்னை அடித்ததாக தான் விசாரணையில் சொல்லியுள்ளேன். எதிரிகள் என்னென்ன ஆயுதங்களால் என்னை தாக்கினார்கள் என்று மருத்துவரிடம் சொன்னேனா என்றால் இல்லை.

9. இடது கையில் எந்த எலும்பு முறிவு ஏற்பட்டது என்றால் இடது கை தோள்பட்டையில் ஜவ்வு விட்டுவிட்டது. தனியார் மருத்துவமனை வேலுஉடையான் மருத்துவர் எலும்பு முறிவு மருத்துவர் ஆவார். அவர் எம்.ஆர்.ஐ ஸ்கேன் எனக்கு எடுத்தார். போலிசாரிடம் நான் எம்.ஆர்.ஐ.ஸ்கேன் மற்றும் மருத்துவ ஆவணங்களை ஒப்படைத்தேனா என்றால் ஒப்படைத்தேன். காவல்நிலையத்தில் உள்ள பெண் போலிசிடம்

கொடுத்தேன், அவர் பெயர் எனக்கு தெரியாது. 1-ம் எதிரி எங்கள் ஊர் பஞ்சாயத்தின் தலைவராக நிற்பதற்கு முயற்சி செய்தார் என்றாலும், அதை தடுப்பதற்காக வேண்டி, எங்கள் ஊர்காரர்கள் சொல்லிகொடுத்ததின் பேரில் நான் பொய் புகார் கொடுத்து, எதிரிகளின் மீது இந்த வழக்கு கொடுத்தேன் என்றால் சரியல்ல.

10. எனது புகார் வாக்குமூலத்தில் 05.02.2022 அன்று மதியம் 2.30 மணிக்கு சம்பவம் நடந்ததாக சொல்லியுள்ளேன். சதீஷை யார் அடித்தார்கள் என்று குறிப்பிட்டு புகார் வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரியல்ல, சொல்லியுள்ளேன். சதீஷின் நடுமூக்கில் தான் எதிரிகள் அடித்தார்கள். நான் சொல்வதுபோல் சம்பவம் எதுவும் நடக்கவில்லை என்றாலும் எதிரிகளுக்கு இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. 1-ம் எதிரியின் மகன்களான மற்ற 3 எதிரிகளும் பொறியியல் பட்டதாரி என்பதால் அவர்கள் மீது பொய்யான புகார் கொடுத்து அவர்கள் எதிர்கால வாழ்வை சீர்ழிக்க வேண்டும் என்று நடக்காத சம்பவத்தை நடந்ததாக கூறி புகார் கொடுத்து பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் ஊர் நாட்டண்மையோ, மக்கள் பிரதிநிதியோ இல்லை என்றால் சரிதான்.

**<u>மறுவிசாரணை இல்லை.</u>**

Taken down by me Certified that contains a true and correct statement made by the Accused read over and admitted by the / him to the correct.

-Sd-G. Ragothaman, M.A., L.L.M.,
Judicial Magistrate No.III
Cuddalore.